# தேவன் அற்புதங்களைச் செய்துள்ளாரா?

வேதாகமத்தின்படி, தேவன் மனித வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலங்களில் அற்புதங்களைச் செய்துள்ளார். நாம் திட்டவட்டமான கேள்வியான, "கிறிஸ்தவத்தின் அற்புதங்கள் நடைபெற்றனவா?" என்பதை ஆலோசித்துப் பார்ப்போம். இந்தக் கேள்வியைக் கருதுகையில், டேவிட் ஹியூம் என்பவர், அற்புதங்களின் சாட்சியத்தினுடைய நம்பகத்தன்மைக்கு எதிராகத் தன்னுடைய சொந்த அனுபவங்களைத் தான் எடை போட வேண்டும் என்று முடிவு செய்தார்.

## ஒரு தவறு இருக்க முடியுமா?

சாட்சியத்தில் ஒரு தவறோ அல்லது ஒரு வஞ்சனையோ இருக்க முடியுமா? அற்புதத்தின் மீதான நம்பிக்கையானது சாட்சியத்தை மறுத்தலை விடச் சுலபமானதாக உள்ளதா? சில விஷயங்களில், "நிலைநாட்டப் பிரயாசப்படுகின்ற உண்மையைக் காட்டிலும் தவறானது அதிகம் அற்புதமுள்ளதாக இருக்கும்" என்பது எட்வின் A. பார்ட் அவர்களினுடைய கூற்றின்படியானதாகும்.

மிகவும் அதிகமாக நம்பிக்கையற்றுப் போவதென்பது எல்லாவற்றையும் நம்புவதைப் போலவே அறிவிற்கு ஏற்பில்லாததாகவே உள்ளது. சுயாதீனமான பல சாட்சிகள், தவறான முன் எண்ணமின்றி, ஆழ்ந்த சிந்தனையும் நேர்மையும் கொண்டிருந்தால், மற்றும் அந்த நிகழ்ச்சியானது நன்கு அறியப்பட்ட இடத்தில் நடந்திருந்தால், இவைகள் நம்பகத் தன்மையின் சட்டங்களாக ஏற்றுக் கொள்ளப்படும்.

## இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றிச் சிந்தியுங்கள்

காயப்பட்ட இயேசுவின் சரீரம் மீண்டும் வாழ்ந்ததென்றால், அப்போது நமது உயிர்த்தெழுதலில் நிச்சயமிருக்கிறது மற்றும் வேதாகமத்தின் பிற அற்புதங்கள் யாவையும் நம்புவதற்குச் சுலபமாகி விடும். இயேசுவின் சரீரம் உயிர்ப்பிக்கப்படவில்லையென்றால், நமது நம்பிக்கை வீணானதாகி விடும், மற்ற எந்த அற்புதமும் கவனிக்கத் தகுதியற்றதாகி விடும். ஆதலால் கிறிஸ்தவமானது இந்த ஒரு அற்புதத்திலேயே நிலை நிற்பதாகவோ அல்லது அழிவதாகவோ உள்ளது.

*உயிர்த்தெழுதலின் சாட்சியத்தைப் பற்றிய விஷயம் என்ன? ஐந்நூறுக்கு மேற்பட்ட மக்கள் சாட்சியளித்தனர், அவர்கள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைத் தங்கள் சொந்தக் கண்களால் கண்டிருந்தனர் (1 கொரி. 15:6). சுவிசேஷங்கள் முரண்பட்டவைகளாயில்லையென்றாலும், எழுதிய விதத்தில் சுயாதீனத்தை உரிமைகோருமளவுக்கு மாறுபட்டுள்ளன, அவைகள் ஏமாற்றுவதற்காகச் செய்யப்பட்ட கூட்டு சதியல்ல. தெளிவான, கருத்துள்ள மனிதர்கள் உயிர்த்தெழுதல் வரவிருந்ததை நம்பவில்லை. அதைப் பற்றி முதன்முதலில் கேள்விப்பட்ட பொழுது அவர்கள் அதைக் கூட நம்பவில்லை. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை சிலர் கண்டு தொட்டுப் பார்த்த பிறகும் கூட, அவர்களுடைய "... அவிசுவாசத்தைக் குறித்தும், அவர்களுடைய இருதய கடினத்தைக் குறித்தும் அவர்களைக் கடிந்து கொண்டார்" (மாற். 16:14). இந்த மனிதர்கள் ஹியூம் என்பவரைப் போலவே உயிர்த்தெழுதல் என்ற கருத்தைக் குறித்துத் தப்பெண்ணம் கொண்டிருந்தனர்; அவர்கள் இணங்க வைக்கப்பட வேண்டியவர்களாய் இருந்தனர். பிற்பாடு, தங்களின் நித்திய நலனானது உயிர்த்தெழுதலைச் சார்ந்திருந்தது என்பதை உணர்ந்து அறிந்த பிறகு, கிறிஸ்து கல்லறை யிலிருந்து வந்த பிறகு தாங்கள் அவருடன் உணவருந்தியிருந்ததைக் குறித்துத் தங்கள் வாழ்வைக் கொண்டு சாட்சி கொடுக்கச் சித்தமாயினர்.*

*"நேர்மை" என்ற வார்த்தை மட்டுமே இத்தகைய நடக்கையை விவரிக்கப் பயன்படக்கூடும். நவீன பட்டறிவியவாதி எவரும் செய்ய முடிந்தது போலவே அவர்கள் மிக நுணுக்கமாக ஆய்வு செய்தனர். அவர்கள் பட்டறிவிய முறையையே பின்பற்றினர்: கல்லறையின் உட்பகுதியானது சவ அடக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்ட சீலைத் துணி மற்றும் தலையைச் சுற்றியிருந்த துணி ஆகியவற்றுடன் பரிசீலனை செய்யப்பட்டது. சாட்சிகளிடத்தில் கேள்வி கேட்கப்பட்டது. ஜீவ வசனத்தை அவர்கள் தங்களின் சொந்தக் கைகளினாலேயே கையாண்டனர்!*

## பொய்யான அற்புதங்களுடன் ஒப்பிட முடியாது

பொய் மதங்களின் அற்புதங்கள் கிறிஸ்தவத்தின் மிக மேன்மையான (இந்த) அற்புதத்துடன் ஒப்பிடப்பட முடியாதவைகளாகும். உயிர்த் தெழுதலுக்கான ஆதாரங்கள், இஸ்லாம் அல்லது புத்த மதத்தின் எந்த அற்புதத்தை விடவும் மிகவும் மேலானதாக உள்ளன. உறுதியான, உண்மையான மற்றும் சட்டபூர்வமான ஆதாரத்தில் நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலானது சரித்திர வரலாற்று நிகழ்ச்சிகளில் மிகச் சிறந்த வகையில் உறுதிப்படுத்தப்பட்டதாக உள்ளது.